**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW20**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | **Dr. மணிவாசகம்** | **Father's Name** | : |
| **Village** : | | **Taluku** | : |
| **Caste** : | | **Calling** | : |
| **Religion** : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.12.2020 அன்று கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண்.

483/2020 வழக்கில் தொடர்புடைய ரஞ்சித்குமார், வயது 27, ஆண் பிரேதத்தின்மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளரிடமிருந்து அன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு பெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்ட, பிரேத பரிசோதனையை அன்று பிற்பகல் 1.15 மணிக்கு தொடங்கினேன்.

**<u>பிரேதத்தில் காணப்பட்டவை :-</u>**

**<u>உடைகள் :-</u>**

பிரேதத்தில் மஞ்சள் நிற சட்டை, கருப்பு நிற டிராயர், வெள்ளைபனியன் ஆகியவை இரத்தம் தோய்ந்து காணப்பட்டன.

பிரேதத்தில் மரண விரைப்பு ஆரம்பகட்ட நிலையில் இருந்தது. மரணத்திற்கு பின்பான இரத்தஉறைவு உடலின் பின்பகுதியில் லேசாக காணப்பட்டது. பிரேதமானது சுமாரான உடல்வாகுடன் காணப்பட்டது. அழுகலுக்கான மாற்றம் எதுவும் இல்லை.

**<u>மரணத்திற்கு முன்பான கீழ்கண்ட காயங்கள் பிரேதத்தில் காணப்பட்டன:-</u>**

1. 9 x 1 x 0.5cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் இடதுபக்கம் காணப்பட்டது. அந்த காயமானது இடது காதிலிருந்து 9 செ.மீ. மேல்புறமாக இருந்தது.

2. 11 x 1 x 0.5 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் இடதுபக்கம் காணப்பட்டது. அந்த காயமானது மேற்கண்ட 1வது காயத்திலிருந்து 1.5 செ.மீ. பின்புறமாக இருந்தது.

3. 9 x 1 x மண்டையோடு ஆழத்தில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் உச்சிப்பகுதியில் காணப்பட்டது. அந்த காயமானது தலைத்தோல், மண்டையோடு ஆகியவற்றை வெட்டியிருந்தது.

4. 12 x 1 x 0.5cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் உச்சந்தலையில் காயம் எண். 3 ல் குறுக்காக காணப்பட்டது.

5. 11 x 1 x 2.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் முகத்தின் வலதுபக்கமாக காணப்பட்டது. அந்த காயமானது வலது காது, கன்னம், திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு, மூக்கு ஆகியவற்றை வெட்டியிருந்தது.

6. 7 x 1 x 0.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் மூக்கில் காணப்பட்டது.

7. 10 x 1 x 2 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 6 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

8. 7 x 1 x 1.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 7 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

9. 6 x 1 x 3 cm அளவில் நேரான வெட்டுக்காயம், வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 8 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

10. 12 x 1 x 5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் நாடிப்பகுதியில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு, தாடைஎலும்பு, கழுத்து தசைகள், உணவுக்குழாய், மூச்சுக்குழாய் ஆகியவற்றை வெட்டியிருந்தது.

11. 7 x 1 x 2 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது முன்னங்கையில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், தசைகளை வெட்டியிருந்தது. முழங்கையிலிருந்து 4 செ.மீ. கீழாக காணப்பட்டது.

12. 7 x 1 x 3 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது முன்னங்கையில் காணப்பட்டது. டஅந்த காயமானது மேற்சொன்ன காயம் எண். 11லிருந்து 2 செ.மீ. கீழாக காணப்பட்டது. திசுக்கள், இரத்தக்குழாய், தசைகள் வெட்டப்பட்டிருந்தது.

13. 5 x 2 x 3 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலதுகை மணிக்கட்டில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், தசைகள், இரத்தக்குழாய், நரம்புகள் ஆகியவற்றை வெட்டியிருந்தது.

14. 3 x 1 x 1.5 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது கையின் பின்புறமாக காணப்பட்டது.

15. 5 x 2 x 1.5 cm, 4 x 2 x 1.5 cm, 1 x 1 x 1 cm அளவில் சாய்வான மூன்று வெட்டுக்காயங்கள் இடது உள்ளங்கையில் காணப்பட்டது.

16. 5 x 1 x 0.5 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் இடது கையில் பின்பகுதியில் காணப்பட்டது.

**<u>சிராய்பு காயங்கள்</u> :–**

1. 7 x 0.25 cm அளவில் வலது தோள்பட்டையில் காணப்பட்டது.

2. 3 x 0.5 cm அளவில் இரண்டு சிராய்ப்பு காயங்கள் வலது கையில் காணப்பட்டது.

3. 6 x 0.25 cm அளவில் வலதுபக்க நெஞ்சுப்பகுதியில் காணப்பட்டது.

4. 8 x 0.25 cm அளவில் நெஞ்சுப்பகுதியில் நடுவில் காணப்பட்டது.

5. 11 x 0.25 cm அளவில் தொப்புளுக்கு வலதுபுறமாக காணப்பட்டது.

6. 10 x 0.25 cm அளவில் தொப்புளுக்கு இடதுபுறமாக காணப்பட்டது.

7. 11 x 0.25 cm அளவில் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

**<u>பிற உறுப்புகள்</u> :–**

தலைத்தோல், மண்டையோடு ஆகியவற்றில் மேற்சொன்ன வெட்டுக்காயம் எண்கள். 3, 4 காணப்பட்டன. மூளையில் இரண்டு பக்க பரைட்டல் பகுதியில் இரத்தக்கட்டு காணப்பட்டன. மார்புக்கூடு, வயிற்றுப்பகுதி சீராக இருந்தது. இருதயம் சீராக இருந்தது. இரத்தக்குழாய்கள் சீராக காணப்பட்டன. நுரையீரலில் இரத்தம் படிந்திருந்தது. கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் ஆகியவை சீராக காணப்பட்டது. அவற்றின் குறுக்குவெட்டுத்தோற்றம் வெளிறியிருந்தது. இரைப்பையில் 300 கிராம் அளவிலான பாதி செறித்த உணவு காணப்பட்டது. வேறு வாடை இல்லை. சவ்வு சீராக இருந்தது. சிறுகுடலில் 50 கிராம் அளவிலான பாதி செறித்த உணவு காணப்பட்டது. வேறு வாடை இல்லை. சவ்வு சீராக இருந்தது. சிறுநீர்பையில் 30 மில்லி சிறுநீர் காணப்பட்டது. நாவடிஎலும்பு, முதுகுதண்டுவடம் ஆகியவை சீராக காணப்பட்டது. மேற்கண்டவைகளில் இருந்து இறந்துபோன நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினாலும், அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கினாலும் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் காயம் எண் 4

மரணம் விளைவிக்கக்கூடியது என்றும் கருத்துக்கூறி சான்று வழங்கினேன். பிரேதத்தை குளிர்சாதன அறையில் வைப்பதற்கு 2 மணி நேரம் முதல் 6 மணி நேரத்திற்குள்ளாக மரணம் ஏற்பட்டிருக்கும் என்று கருத்து கூறினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத பரிசோதனையின்போது உடல் உள்ளுறுப்புகள் மற்றும் இரத்தமாதிரி சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு மற்றும் குருதி வடிநீரியல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அதே கருத்துடன் இறுதியறிக்கை வழங்கினேன். **அந்த இறுதியறிக்கை அ.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் **அ.சா.பொ.16 வாள்கத்தி, அ.சா.பொ.17 வீச்சருவாள்,** அ.சா.பொ.10 மற்றும் 14 சூரிக்கத்திகளால், அ.சா.பொ.2 மற்றும் 3 கருப்பு சிவப்பு கத்திகள் ஆகியவற்றால் நான் மேற்சொன்ன வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்துடன் கூடிய மஞ்சள் நிற சட்டை இது தான் அது அ.சா.பொ.18, இரத்தத்துடன் கூடிய கருப்பு நிற டிராயர் இது தான் அது அ.சா.பொ.19, இரத்தத்துடன் கூடிய வெள்ளைபனியன் இது தான் அது அ.சா.பொ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரித்தனர்.

**7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வெட்டுக்காயத்திற்கும் குத்துக்காயத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். குத்துக்காயத்தை பொறுத்த அளவில் கூர்மையான ஆயுதத்தின் நுனிப்பகுதி கூர்மையாகவும் நேராகவும் குறிப்பாக கத்தி, Screw Driver, ஐஸ்கட்டி ஆகியவை இருக்கும் என்று சொன்னால் பொதுவாக சரிதான். வெட்டுக்காயத்தை பொறுத்த அளவில் வெட்டும்பகுதி கூர்மையாக இருந்தால்

வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். குறிப்பாக கோடாரி, அருவாள் போன்ற ஆயுதத்தால் வெட்டுக்காயம் ஏற்படும் என்று சொன்னால் கூராக இருக்கும் எந்த ஆயுதத்தாலும் வெட்டக்காயம் ஏற்படும். வெட்டுக்காயத்திற்கும் வெட்டுக்காயம்போல் தோற்றமளிக்கும் காயங்களுக்கும் வித்தியாசம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். வெட்டுக்காயம்போல் தோற்றமளிக்கும் காயங்கள் மழுங்கிய ஆயுதங்களால் கழுத்து, தலை, கண்ணம், கண் புருவம், கை முட்டி, கால் முட்டி போன்ற எலும்பு உள்ள பகுதிகளில் மழுங்கலான ஆயுதங்கள் கொண்டு தாக்கும்போது வெட்டுக்காயம் போல் தோற்றமுள்ள காயம் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 16 காயங்கள் வெட்டுக்காயங்கள் என்று சொன்னால் சரிதான். ஆயுதம் வளைந்து இருந்து மனித உடலில் தாக்கும்போது பிறை வடிவில் காயங்கள் ஏற்படும் என்று சொன்னால் எல்லா காயங்களுக்கும் அவ்வாறு வருவதில்லை. 1 முதல் 4 காயங்கள் தலையில் ஏற்பட்ட காயங்கள் என்று சொன்னால் அவ்வாறு தான் முதல்விசாரணையில் கூறியுள்ளேன். 1 முதல் 16 காயங்களில் பல காயங்கள் எலும்பு உள்ள பகுதிகளில் காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சில காயங்கள் அவ்வாறு உள்ளது. மேற்சொன்ன காயங்கள் அ.சா.பொ.16 வாள்கத்தி, அ.சா.பொ.17 வீச்சருவாள், அ.சா.பொ.10 மற்றும் 14 சூரிக்கத்திகளால், அ.சா.பொ.2 மற்றும் 3 கருப்பு சிவப்பு கத்திகளால் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒருவர் இறந்தபிறகு முதல்நிலை தளர்ச்சி ஏற்படும் என்று சொன்னால் சரிதான். அதற்கு இறந்தபிறகு 1 முதல் 3 மணி நேரத்திற்கு ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 மணி நேரத்திற்கு பிறகு பிணவிறைப்புத்தன்னை ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல அதற்கு முன்பாகக்கூட பிணவிரைப்புத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது.

பிணவிரைப்புத்தன்மை தலையில் ஆரம்பித்து கால் வரை வருவதற்கு 12 மணி நேரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல. பிணவிரைப்பத்தன்மை ஆரம்பித்து 12 மணி நேரம் கழித்து பிறகு 12 மணி நேரம் நீடித்து பிணவிரைப்புத்தன்மை இருக்கும் என்று சொன்னால் திறந்தவெளியில் கிடக்கும் பிணத்திற்கு இது பொருந்தும் குளிர்சாதனப்பெட்டியில் இருக்கும் பிணத்திற்கு இது பொருந்தாது. பிணவிரைப்புத்தன்மை 12 மணி நேரம் இருந்து பிறகு 12 மணி நேரத்தில் படிப்படியாக பிணவிரைப்புத்தன்மை குறையும் என்று சொன்னால் திறந்தவெளியில் கிடக்கும் பிணத்திற்கு இது பொருந்தும் குளிர்சாதனப்பெட்டியில் இருக்கும் பிணத்திற்கு இது பொருந்தாது. அ.சா.ஆ.42 பிரேத பரிசோதனை இறுதி அறிக்கையில் cold Storage என்று தான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். cold Storage –ல் பிணம் இருந்தால் அதற்கு Algor martis என்று குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் cold Storage ல் வைத்த பிணங்களுக்கு Algor martis பொருந்தாது. குளிர்சாதனப்பெட்டியில் பிணம் இல்லாததால் தான் நீங்கள் Algor martis பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல Algor martis என்பது இறந்தவுடன் உடலில் உடல்சூடு குறைவு பற்றி குறிப்பிடுவதாகும் ஆகையால் Algor martis இந்த வழக்கிற்கு பொருந்தாது. அ.சா.ஆ.41 பிரேத கூறாய்வு அறிக்கையில் நீங்கள் பிணம் Cold Storage ல் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.41–ல் பிணவிரைப்புத்தன்மை ஆரம்பித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்ற சொன்னால் சரிதான். பிணம் எப்போது குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது என்றும் எவ்வளவு நேரம் குளிர்சாதனப்பெட்டியில் இருந்தது என்று அ.சா.ஆ.41–ல் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சிராய்ப்பு காயங்களில் 4 வகை

உண்டு என்று சொன்னால் சரிதான். உங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் சிராய்ப்பு காயம் எந்த வகை என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் குறிப்பிட்டுள்ளேன். தோலுக்கு கீழ் ரத்த நாளங்கள் உடைந்தால் தோலின் மேற்புறத்தில் நீல கருப்பு சிவப்பு நிறங்களில் புள்ளிகள் தோன்றுவது Ecchymoses என்று கூறப்படும் என்று சொன்னால் மேற்சொன்ன காயம் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கும்போது ஏற்படும். Ecchymoses சிராய்ப்பு காயம் என்று சொன்னால் சரியல்ல. Ecchymoses சிராய்ப்பு காயங்களில் ஒரு வகை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சரித்திரம் உங்களுக்கு கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். **(இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவுகள் 151, 152ன் படி சாட்சியை அவமதிக்கும் மற்றும் மரியாதைகேடான வகையில் கேள்வி இருப்பதால் இந்த வினாவை தவிர்க்கம்படி அறிவுறுத்தியபோதிலும் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்ட படியால் இந்த வினாவை பதிவு செய்கிறேன். )** நீங்கள் வழக்கின் சரித்திரத்திற்கு அனுசரனையாக நீங்கள் உங்களுடைய அறிக்கைகளை அ.சா.ஆ.41 மற்றும் அ.சா.ஆ.42 யை கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.06 19:05:39 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW21**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அருள்செல்வன் | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது காவல்துறையில் உதவிஆய்வாளராக இருந்து 2023 மே மாதம் பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 17.12.2020 ஆம் தேதியன்று நான் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் பொறுப்பு அலுவலிலிருந்த போது இரவு 10.00 மணிக்கு ரமேஷ், வயது 45, த/பெ.ராமசாமி என்பவர் நிலையம்

ஆஜராகி கொடுத்த புகார் கொடுத்தார். அந்த புகார் இது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகாரைப்பெற்று நான் நிலைய குற்ற எண்.778/2020, சட்டப்பிரிவுகள் 147, 148, 302 இ.த.ச. வின் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை இதுதான் அது அ.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் 2, கரூர் அவர்களுக்கு துரித தபால் மூலம் அனுப்பியும், இதர பிரதிகளை சம்மந்தப்பட்ட மேலதிகாரிகளுகக்கும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்ட நபர் அல்லது வெட்டுப்பட்டு இறந்த நபர் மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவமனையிலிருந்து தகவல் நமுனா வரும் என்று சொன்னால் எனக்கு இந்த வழக்கில் தகவல் நமுனா வரவில்லை ஆய்வாளருக்கு வந்திருக்கலாம். சுப்பிரமணி என்ற தலைமைக்காவலர் 335 உங்கள் காவல்நிலையத்தில் தான் சம்பவ காலத்தில் பணியிலிருந்தார் என்று சொன்னால் சுப்பிரமணி இரண்டாம்நிலை காவலராக பணியிலிருந்தார் எனக்கு காவலர் எண் ஞாபகமில்லை. சம்பவ இடம் காவல்நிலையத்திலிருந்து தெற்கு திசையில் 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல வடகிழக்கில் சம்பவ இடம் உள்ளது. காவல்நிலையத்திலிருந்து கரூர் அரசு மருத்துவமனை எந்த திசையில் எவ்வளவு தொலைவில் உள்ளதுஎ ன்று சொன்னால் தென்கிழக்கு திசையில் உள்ளது சுமார் 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. புகாரை எழுதிக்கொண்டுவந்தார்களா அல்லது காவல்நிலையத்தில் வைத்து எழுதினார்களா என்றால் ரமேஷ்–ன் மகள் சுகுணா என்பவர் ரமேஷ் சொல்ல சொல்ல சுகுணா அந்த புகாரை எழுதினார். சுகுணா அ.சா.ஆ.1 புகாரை எழுதினார் என்று அந்த புகாரில் குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் எதிரி கூல்மணிக்கும் இறந்துபோன நபருக்கும்

முன்விரோதம் இருந்ததாக குறிப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி உதயநிதி என்ற சூர்யா பற்றி புகாரில் குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி கூல்மணி சிறையில் இருக்கும்போது இறந்த நபரை பார்த்ததாகவும் அதனால் பிரச்சனை ஏற்பட்டதாக அ.சா.ஆ.1 புகாரில் இல்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொன்னவாறு சொன்ன விதத்தில் புகாரை பெறவில்லை என்றும் முதல்முதலில் கொடுத்த தகவல் மறைக்கப்பட்டு பின்னிட்டு உங்கள் உயரதிகாரிகள் தூண்டுதலின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் எந்த வகுப்பை சார்ந்தவர் என்று நீங்கள் கேட்டுத்தெரிந்துகொண்டீர்களா என்று தெரிந்துகொள்ளவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.06 19:05:55 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW22**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சேகர்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பரமத்தி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.12.2020 ஆம் தேதியன்று நான் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியிலிருந்த போது 10.30 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.778/2020, ச.பி. 147, 148, 302 இ.த.ச. வழக்கின் முதல் தகவல் அறிக்கையும், புகாரும் இதுதான். அவை ஏற்கனவே அ.சா.ஆ.43 மற்றும்

அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன அ.சா.ஆ.43 முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும்  துரித தபால் மூலம் நீதித்துறை நடுவர் எண்.2, கரூர் அவர்களின் வீட்டிற்கு இரவு 11.30 மணிக்கு கொடுத்துவிட்டு உத்தரவுப்படி மீண்டும் காவல்நிலையம் சென்றுவிட்டேன்.  இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

காவல்நிலையத்திலிருந்து வெளி வேலைக்கு செல்லும்போது பொதுவாக கடவுச்சீட்டு கொடுக்கப்படும் என்று சொன்னால் சரிதான்.  அந்த கடவுச்சீட்டில் என்ன பணிக்கு, எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்று குறிப்பு இருக்கும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு கடவுச்சீட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.  அந்த கடவுச்சீட்டை ஆய்வாளர் விசாரணையின் போது ஒப்படைத்தீர்கள் என்று சொன்னால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.06 19:06:03 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.